459

Series 22

கிராமபோன் கீர்த்தனமிருதம்

(இரண்டாம் பாகம்)

JUL 193

சங்கீதவித்வான்
S. V. சுப்பைய பாகவதர்,
ஆர்மோனியம்
T. M. காதர் பாஷா
T. S. ரங்கம்மாள்,
மதருஸ் A. S. ராஜப்பா,
ஷண்முகவடிவு
K. T. நடராஜம் பிள்ளை
S. R. க லம்,
விசலூர்
N. சுப்பிரமணிய பாகவதர்
எரணகுளம் K. V. நாயுடு
இவர்கள் பாடிய புதிய
பாடல்கள்

காப்பிரைட்] [1930

விலை அணா 2.

NR4
N30.
17773

...VILAS BOOK DEPOT
TIRUPAPULIYUR

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது

அதியற்புதமான

நவரசங்களும் பொருந்திய துப்பறியும் நாவல்

அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடிய

ருக்மிணீகாந்தன்

இந்நாவலை படிப்போருக்கு தான் தெரியும் இதன் பெருமை. இதில் சோகரசம், சிருங்கார ரசம், ஹாஸ்ய ரசம், பக்தி ரசம், முதலிய நவரசங்களால் நிறையப் பெற்ற இந்த நவீனத்தின் பெருமையை படித்த பின்னரே தான் தங்களுக்கு தெரியவரும். கொஞ்சம் காப்பிகளே அச்சானது ஆர்டருக்கு முந்திக்கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—12—0

மேற்படியார் எழுதிய நாவல்கள்.

கோபால ரத்னம்	... 0	14	0
வைதேகி 2 பாகம்	... 2	8	0
ராதாமணி 2 பாகம்	... 2	8	0
பத்ம சுந்தரன் 2 பாகம்	... 2	8	0
கௌரீ முகுந்தன்	... 1	12	0
சண்பக விஜயம்	... 1	12	0
சுகந்த புஷ்பம்	... 1	0	0
நவநீத கிருஷ்ணன்	... 2	0	0
வீர வஸந்தா	... 0	8	0
சாரு லோசனை 2-பாகமும்	... 2	8	0

விலாசம் :—ஸ்ரீவாணிவிலாச புஸ்தகசாலை,

79, சுப்பராய செட்டி வீதி திருப்பாதிரிப்புலியூர்.

உ

கணபதி துணை.

கிராமபோன்

கீர்த்தனாம்ருதம்.

(2-வது பாகம்)

சங்கீத வித்வான்

S. V. சுப்பைய பாகவதர்

பாடிய பாடல்கள்.

பிளேட் நெ. 1707 இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

பாகம் 1 & 2.

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே (பித்)

அநுபல்லவி.

மற்ற மருந்துகள் தின்றாலு முள்ளுக்கு
வல்லே வல்லே ஐயோ அடுமை [பித்]

சரணம்.

பாம்பு புலியு மெய்ப்பாடுபட்டு தேடி
பார்த்துப் பயிரிட்டது—அந்த
பாரளந்த திருமாயனும் வேதனும்
பார்த்துக் களித்ததுண்டு
பார்வதி யென்றொரு சீமாட்டி யதில்
பாதியைத் தின்றதுண்டு—இன்னம்
பாதியிருக்குது பறையா நீயும் போய்
பாரென்றுத்தாரம் தாரும் தாரும் (பித்)

பிளேட் நெ. 2888 காதலின் பாக்கியம் பாகம் 1 & 2 சாமா

பல்லவி

[2] காதலின் பாக்கியம் கதி தரும் யோக்கியம்
காணுவாய் இன்பமே சிலாக்கியம்
பெரியோர் வாக்கியம் [கா]

அநுபல்லவி.

ஆதலினலெனே ஆதரிப்பாயே கண்ணே [கா]

சரணம்

பேதலிக்காதே உன்னை
பிரிந்திடேன் சத்யமிதே
பேசும் மதனயோக பூசிதம்செய்வோமதை
ஈடில்லா பாஸ்கரன் சொல்
தேவியே என்னுவியே [கா]

பிளேட் No 2616 இராகம் சுருட்டி தாளம் ஆதி

பல்லவி.

[3] எனிலம் புலம் கார்க்கும் வள்ளி
எழில் என்ன சொல்லுவேன் (எ)

அநுபல்லவி.

மீனலோசனி பாலனான
வேலவனு க் காய்
ஜனித்து சால வுறக்காய் மதித்து (எ)

சரணம்.

ஆஞ்சுகமும் தன்குல மென்றிவள்
அருங்குரல் கேட்டு வருகுதே
அடர்வனத்திலுள்ள மானினங்கள்
அக்கண்ணைக் கண்டு முருகுதே
மிஞ்சும் சௌந்தர்யம் பெருகுதே
வெற்றி குகனை யுருதிங்கு
கத்திக்குரல் சோப வருகுதே (எ)

பிளேட் நெம்பர் 2616 இராகம் சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி.

(4) சொல்லும் வார்த்தையைக் கேளம்மா தள்ளாதம்மா
சொல்லும் வார்த்தையைக் கேளம்மா [சொ]

அநுபல்லவி.

அல்லும் பகலும் இந்த அவஸ்தையை நீ விடுத்து
அவனியில் தொழிலற்று இருப்பாய் நீ செவிகொடுத்து
[சொ]

சரணம்.

உனக்காகவே நான் சொன்னேன்
ஓஹோ இந்த க்ஷணமே
மனக் கவலை கொள்ளாதே
மானிலத்தி யல்புதான் [சொ]
வெறொரு வருக்காக
வேண்டினேன் இல்லையம்மா
ஆருமுகனே சொந்த உன்
ஆசை மணாள னம்மா [சொ]

பிளேட் நெம்பர் 2510 இராகம் தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி

[5] நிச்சயமாய்த் தீர்க்கக்கட னுக்குவழிதோன்றவில்லை
நீ தானொரு மார்க்கம் சொல்லடி [நிச்]

அநுபல்லவி

கச்சைகட்டிஆடும் தாசி இச்சை கொண்டேன் மகா தோஷி
லஜ்ஜையுற்றேன் ஆரா ரேசி மிச்சம் நிந்திப்பா ராலோசி [நிச்]

சரணம்

பெண்டுபிள்ளை மூன்கால
கண்டையருக் கரிச்சந்தரன்
பிரியமாய் விற்ற தெதற்கு
பின்பவன் பறையனுக்
கடிமையாகி அங்குவந்த
பிரேதங்களை சுட்டதெதற்கு
கொண்ட கடனுக்கு சத்யம்
குறைவு படாத தற்கும்
அண்டினு னல்லாமல் வேறே
அவனுக்கென்ன எனக்கும் [நிச்]

பிளேட் நெம்பர் 2405 இராகம் பைரவி

(6) காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே அது
மேயாதமான் புள்ளி மேவாதமான் விழிமான்
சாயாத கொம்பிரண்டே யிருந்தாலும் தலைநிமிர்ந்து
பாயாதமான் வந்ததுண்டே உந்தன் பார்வையிலே,

பிளேட் நெம்பர் 2405 இராகம் சங்கரபரணம்

[7] எந்த மானிடவேடர் நீர் காண் உமது வேட்டைக்
கேற்றமான் அம்மலையிலுண்டு
இந்த மான் நம்பிதந்தமான் உமதுவலைக்கு
அகப்படாத மான் இளையமான்
அந்தமான் நல்ல சௌரியமான்
தைரியமான் அதிவீர மான்
சொந்த அம்மான் மகன்போல எதேதோ பேசுகிறீர் என்
தோழி மானை விட்டு விரட்டு வேனே

பிளேட் நெம்பர் 1708 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

பல்லவி.

[8] மாரன் விடுகணை பாயுது—மாமயிலே
எதிர் வந்தெனைத்தாவி [மாரன்]

அநுபல்லவி

ஈராறு மங்கையின் பாதம் பணிந்திட்டேன்
நேரிட்டு இங்கென்னை ஏறிட்டுப் பாரடி [மாரன்]

சரணம்

வெந்திடும் தீப்படும் கொம்புறப் பாயுதடி
மனம் வெகுண்டுன்னைத் தேடுதடி
அந்த மதிக்குப் மலைக்கும் கடற்குள்ள
அர்த்தப்பட நீ வருவது வெற்றிக்கிடமே திடுக்கிட
ஆரியர் பூசிக்கும் வீரிய சித்திரமே
உள்ளன்பர்கள் கோரும்
காரியர் நாயகமே வருவாயடி
கண்ணும் பொன்னும் பொடி
எண்ணும் படிவரும் [மாரன்]

உறையூர் டி. எம். காதர்பாஷா

பாடியது

பிளேட் நெம் 1706 இராகம் சகானா தாளம்-ஆதி

(9) ஐயா பழநிமலை வேலா எனக்
கார் துணை சொல்லநு கூலா
துய்யா பன்னிருகை வேலா உன்னை
தோத்திரம் செய்தேனுமை பாலா
பெண்டு பிள்ளை ஆசை மேலிட்டு நான்
பித்தனாய்த் திரிந்தலைந்தேன் கெட்டு
எண்டிசையு முன் பாதம் தொட்டு
இருகரங்குவித்தேன் கும்பிட்டு (ஐயா)

பிளேட் கெம் 2547 இராகம் காம்போதி தாளம்-ஆதி

பல்லவி.

(10) முருகா வென்றுரைத்து மூர்த்தியைத் தொழுதால்
முன்செய்த தீவினை போமினி மேல் (முரு)

அநுபல்லவி.

வருவாய் மயிலேறி வல்வினைத் தீர்ப்பாரே
தருவார் பல வரங்கள் தயாபரன் காப்பாரே (முரு)

தொகையறு.

நாதா ப்ரபோதா விநோதா
வேதாந்தா ரூபா வேணி தனையா அதீதா
திரு மங்கை லக்ஷிமி தீன தயாளா
மருகா முருகா வருகா செவ்வேளா
பருவரல் மேலா
பார்வதி பாலா
உருகாதா வேலா
உம்பர் சீலா (முரு)

பிளேட் 1751. இராகம்-பியாக். தாளம் மிஸ்ரகதிசாப்பு.

பல்லவி.

(11) ஆலவாய் மதுராபுரி நகர் அம்பிகா எனையாதரி [ஆல]

அநுபல்லவி

அம்பிகா எனையாதரித்திரு வருள் புரிந்து பராபரி [ஆல]

தொகையரா

சிலமாய் அறுபத்து நான்கு திருவிளையாடல்
செய் சொக்கேசர் பாரி
தேவரோடு மாதுடன் செம்மை பெறவே
திருக்கருணை யளித்த மேரி

அநுபல்லவி முடுகு.

காலை மாலை சதா நீயேகதி காவலித்தருணகரி
காவலித்தருணகரி பாஸ் காநிஷ்ட சகோதரி [ஆல]

---

600 006.

பிளேட் 1903. இராக மால்கோஷ் தாளம் ஆதி.

பல்லவி.

12] வாவா கார்த்திகா செழும்
மரகத மயில்மிசை தருணமெனது முனம் [வாவா]

அநுபல்லவி

பூவிலிவ் வாழ்வு பொய்யன்றோதாழ்வு
புனிதம்பெற பூஜித்தேன் புகழ் கடம்பனே
மகிழ்திடம் தந்தருள [வாவா]

சரணம்

தஞ்சமுன்பாதம் சாற்றிடும் போதம்
தண்டமிழ்ப்பதமே சுந்தரன்
ஸ்தான பக்திச் சித்தச்
சோக மகற்ற விச்சுப தினத்தில் [வாவா]

T. S. ரெங்கம்மாள் பாடியது.

பிளேட் நெம்பர் 2071.

[13] இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

ஓலமிட்ட சுரும்பு தண தண வென
வேசிரத்தின் விழுங்கை பளீர் பளீரென
ஓசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென
விரகலீலை

ஓர்மிடத்து லெழும்பு கூகூகூகூவென
வேகுதிக்க உடம்பு வெரீர் வெரீரென
ரோமகுச்சு நிறைந்து சிலீர் சிலீரென
அமிர்த மாரன்

ஆலயத்துள்ளிருந்து குபீர்குபீரென
வேர்வைமெத்த விழுந்து சலார் சலாரென
ஆரமுத்த மணிந்து ஆளா ஆளாவென
மருவுமாரன்

ஆசையிற் கைகலந்து சும்மா சும்மாபவ
சாகரத்திலழுந்து ஏழா ஏழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா வென
வகை வருதோ

Madras A. S. ராஜப்பா

பிளேட் நெம்பர் 2810 இராகம் இந்துஸ்தான்

சாபி, தாளம் ஆதி

பல்லவி.

கந்தா காருண்யனே கன சேவலனே

அநுபல்லவி

செந்தூரார் புண்யனே கொடி காவலனே [கந்]

சரணம்.

ஆதியோடனாதியான ஐயனே முருகையனே
பொன்னே பூம்பதமே உன்னைப் போற்றினேனே
என்மேலேன் கதமே பணிந் தேற்றினேனே [கந்]

தொகையரு

காக்ஷி யோதக டாக்ஷி மாக்ஷிகொள்
கந்தனே சிவ மைந்தனே
சாக்ஷியேது மீ னாக்ஷியாள் தரு
சந்தனே பிர பந்தனே

சரணம் தொடர்ச்சி

தந்தாளாய் சரணம் இன்னும் தாமதமா
பண்கேளாய் தருணம் அசம்பா விதமா [கந்]

பிளேட் நெம்பர் 2810 இராகம் செஞ்சுருட்டி புன்னாக
வராளி தாளம் ஆதி

[15] நாத சங்கீத பொன் மணி மண்டபம்
நயனத்திடையினில் நடனங்கண்டே
நாவை மடக்கியே மேல்வாசல்
களினமது வருந்த அருள்வாயே
ஞான வேலா ஞானவேலா
நவமணி பதித்தொளிர் ஞானவேலா [நாத]

முத்தொடு பவளமும் பச்சையுமாய்
மூச்சுடரொளிமணி முழக்கமெனும்
சுத்த அற்புத தசவித நாதம்
தொனிக்குதெனக்குள் சுதிலயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனெனை இனி பரிசோதியாதே [நாத]

பிளேட்நெ. 2889. இராகம் பியாக் தாளம்.

பல்லவி.

சிக்கந்த மலைக்குகையி விருப்பானே முருகா
அக்கந்த மலைக்கண்ணன் விருப்பான மருகா (சி)

மகுடங்கள்.

தெள்ளுமாமணி ரஸ்யாதீத
பள்ளிவாசலின் னிஸ்லாம் வேத (சி)

திகழு முகம நிந்தஸ்தான்
புகழு முடைய குணமஸ்தான் [சி]

தக்கன் தவமழித்திட பர
னுக்கந்த ரகசிய மெனு மொ
ழிக்கந்த மலை யொழி பிரப
லக் கந்த மகிதல பெரு மை [சி]

தோகையரு

மகா ஜனக் கூட்டமே முதிர் கார்த்திகை தீபமாம்
மாமாங் கநற் பொய்கை
சதா கோடி சங்கமே அரோஹரா வென்றுதுதி
சாஷ்டாங்க ஞானச் செய்கை

சரணம்.

சாலக் குற வஞ்சி மணா
ளாலக்ஷண விஞ்லைச குணா (சி)

திருச்செந்தூர் மிஸ் ஷண்முகவடிவு பாடியது.

பிளேட் நெம்பர் 1803 இராகம் பேகடா தாளம் ஆதி.

பல்லவி

[17] மனமான ஒரு சிறுவன் மலரடியைப் பிடித்தும்
மதியாம லிருக்கலாமோ முருகா (மன)

அநுபல்லவி.

உனையே தினம் கொண்டாடி உள்ளமுருகப் பாடி
கனிகர மில்லாததேனோ கந்தா உனக்கு நீதி தானோ [மன]

சரணம்.

நம்பியிருந்த எனையே நட்டாற்றில் விடவும் போமோ
அம்பா பார்வதி தனையா அடியேனைக் கைவிட லாமா
உம்பர் மனோகரனே உனக்கு நான் என்ன வேமா
எம்பிரானே முருகையா என்மேலின்னமும் வீமா [மன]

பிளேட் நெம் 1804 இராகம் ஸ்ரீராகம் தாளம் ஆதி.

பல்லவி

[18] உன்னடியைவழி கண்டு உளம் நொந்து வாடுகின்றேன்
உமாமஹேஸ்வரி தனையா [உன்]

அநுபல்லவி

பன்னக சயனன்பேரில் பள்ளிகொண்ட மால் மருகா
என்னாளும் மறவாதிருக்க எனக்கு வரம் தா முருகா [உன்]

சரணம்

அமரரிடரை தீர்த்தவனே
குமரக்குருபர தேசிகனே
சமரா புரியனே சண்முகனே [உன்]

177713

மாய பிரபஞ்ச வாழ்க்கையிலே கெட்டேன்
மனம் போன வாருக மாறி நின்னடி தொட்டேன்
தீய வழிகளையே தீனனே நான் விட்டேன்
ஆயன் மருகா முருகா அருள் மொழிக் குட்பட்டேன் [உன்]

பிளேட் நெம்பர் 1835 இராகம் அடாணு தாளம் ரூபகம்

பல்லவி.

[19] முருகன் திருமால் மருகன் பெருமை—அந்த
முக் கண்ணனுக்கு மில்லை தணிகாசல [முரு]

அநுபல்லவி.

இருபோது மன தவரைக் கண்டால்
இலகும்படி களிபொங்கிட வளருந்திரு தணிகாசல [முரு]

சரணம்

புன்னகை மேவும் வதனவிம்பத்தின்
பொருந்து மந்த ஹாசன்—செழும்
பொன்னொளிர் மேவும் பன்னிரு கரங்களும்
பொருந்துங் கிருபாவேசன்
சன்னதியில் வந்து தங்கு மூலாசன்
தவஞ் செய்யுந் தொண்டருக்கருள் முருகேசன்
உன்னைக் கண்டால் வில காதவர் நேசம்
உலகத்தினி லிவருக்கிணை எவருற்றவர் தணிகாசல [மு]

கார்த்திகைப் பெண்க ளறுவருங் கூடி
களிக்கவரும் பாலன்—எங்கும்
காணக்கிடையாத மாதரை வேறக்
கண்டவடி வேலன்
ஆர்த்தக சூரரை அன்றே கொல்லுங்காலன்
ஆடு மயில் மீது ஆரோகணியுங் கோலன்

கோர்த்த கடம்ப மயிலேறுந் திரிசூலன்
குகனற்றவ ரகமுற்றிட புகழ்பெற்றிடுந் தணிகாசல [மு]

குட்டியே பிரமனை முன் சிறையிலிட்ட
கோகனக னற்ற வேதன்
குற்ற மில்லாமலே சிவனுக் குபதேசம்
செய்த குரு நாதன்
எட்டுத் திசையும் புகழும் நன்னீதன்
எந்திழை தெய்வானை மகிழும் விநோதன்
மட்டிலடாணு ராகப்ரசங்கீதன்
மதுரைத் தமிழ் முனிவர்க்கருள் சிவசுப்ரமணியன் பெயர் [மு]

K.T. நடராஜம் பிள்ளை பாடியது

பிளேட் நெம்பர் 3671 இராகம் ஸ்ரீராகம் சாப்பு தாளம்

பல்லவி.

[20] திரிலோகமும் புகழும் சுந்தர
தீர வீர சூரனுனே [திரி]

அநுபல்லவி

இன்னாட்டுக் கதிகாரன்
விண்ணாட்டுக திசூரன்
நன்னாட்டுக்கு மதிகாரன்
நாகரீக சம் போகன் நானே [திரி]

தாரணி புகழ் கெம்பீரன்
அரிவையர்க் கிசைந்த மாரன்
பரி பூரண சுகவுதாரன்
பாத மீதில் ஓதும் வேதன் நானே [திரி]

S. R. கமலம் பாடியது

பிளேட் நெம் 5254 இராகம் காப்பி தாளம் ஆதி

பல்லவி

[21] சென்று கனி பறித்துக் கொண்டு—நான்
சீக்கிரம் வருவேனுனு மின்று அவர் (சென்)

அநுபல்லவி

கன்றை யிழந்த பசுபோல
கலங்குவார் தாய் தந்தையிந் நாளே
கட்டழகி யானே
இட்டமுடன் மேலோர் பசி
தீர்ப்பதென் கடமையாலே நான் (சென்)

சரணம்.

தந்தை தாய்க்குத் துணை யாரு நீ
தனித்திருந்தவரைக் காரு அவர்
சிந்தை கலங்குவார் வேறு
சிஸ்ருஷை செய்வோரார் கூறு
சிறுத்தைப் புலி சீறும்
தீவினைகள் நேரும் இங்கு
தீரத்துடனிரு போய் வாரேன் நான் [சென்]

பிளேட் நெம்பர் 5095 இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

[22] கை வரிசை செய்யாது போம் ஒய் நாரதரே (கை)

அநுபல்லவி.

மெய்யது துடித்துமே மெல்லியை யடுத்துமே
தையலைக் கெடுக்க தைரியமாய் வந்தீரே (கை)

அநுபல்லவி.

கூட்டிக் கொடுப்பதுங்கள் கோத்திரத்தின் முறையோ
ஆட்டி படைக்கவேண்டாம் நீட்டிக் கெடுக்கவேண்டாம்
ஆவலாயோடி வந்தீர் உமக்கென்ன அக்கரையோ (கை)

எனக்கு வந்திந்த புத்தி இணைக்க வந்தது போதும்
இனி யிங்கு நில்லாதே எடுத்தடி பின்வையும் (கை)

வ்சலூர் N. சுப்பிரமணிய

பாகவதர் பாடியது

பிளேட் 27௦1 இராகம் பியாக் தாளம் ஆதி.

பல்லவி.

(23) இதுதானோ தில்லை ஸ்தலம் இத்தனை நாளுமறியேன்
இதுதானோ தில்லை ஸ்தலம் (இது)

அநுபல்லவி.

அதுவோ இதுவோ வென் றலைந்திடும் பேயனைக்
கதி தருவேனென்று கைகாட்டி யழைக்குது (இது)

காசியினியி லிதைக் கைலை யென்றெல்லோரும்
பேசக் கேட்டதேயன்றி பேணிப்பார்த் தறிகிலேன் (இது)

பிளேட் 2781 இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

பல்லவி.

(24) அடித்தது போதுமையா என்னை
அடித்தது போதுமையா (அடி)

அநுபல்லவி.

அடித்தாலும் உங்கள் கை வலியாதோ
அடிமை வேலை செய்யு மென்னுடன் வாதோ
படித்த தெல்லாமென் மனதிற் படாதோ
பாவியெனக்கு மினி மேற்றெறி யாதோ (அடி)

நல்ல வாமுங்கள் மனது பிரகாரம்
நடக்காமலிருந்தது வப சாரம்
சொல்லத் தெரியுமோ எனக்குபகாரம்
சுகிர்த சாவியுங்க ளாலே யிந்நேரம் (அடி)

எரணாகுளம் K. V. நாயுடு.

நெ. 2838 } முருகனிடமென். இராகம் காம்போதி தாளம் ரூபகம்
சோம சுந்தரா. கேதாரா கௌ்ளம்.

பல்லவி.

[25] சோமசுந்தர சர்வேசா
தூய மங்கள தினந்துதி மதுரை [சோ]

மகுடங்கள்

துடர் பவவினை பொடி படவருள்
சட மிசை மகுட மணியுங் கடவுளே [சோ]

துலங்குமிங் கிதம்பெருஞ் சதங்கைபொன்
பதந் துணையருள்.
சோதித்து வாதிப்ப தேனிது
நீதிக்குத் தானெப்பு மோ புகல் [சோ]

அநுபல்லவி

தேமிகுந்திட நால்வர் மகிழ்ந்து
தேவாரப்பாசுர துதி நாவாரப்பேசி கதியருள் [சோ]

சரணம்.

என்றுந்துதி செய்தேனே நெடுநாளாய்
என் முறையைச் சற் றிரங்கி நீ கேளாய்
நன்று சுந்தரன் நம்பிக்கையாளாய்
நாத சங்கீத விநோதபோத த
யாநிதியே நலமருள் [சோ]

2 பல்லவி.

[26] முருகனிடமென் முறை சொல்வாய் கிளியே [முரு]

மகுடங்கள்

முழுங்குநிதி செழுப்பழனி
இளங்குமர னெனும் பிரபல திரு [முரு]
முற்றும் உனை நம்பியவொரு
பக்தன்சொலும் சங்கதியென அந்த [முரு]
முப்பிறப்பில் கொண்டவினை மூண்டிருந்தால்
இப்பிறப்பில் அண்டிடாமல் வேண்டுவதாய் [முரு]
முக்கியமிது பற்பலதுயர்
பற்றுவது ச கித்திட வசமல்ல [முரு]

அநுபல்லவி.

விரிதருமுலகோர் புகழ்திரு
விளையாடல் மதுரையில்
திருநாளைப் பெறுபவள் புதல்வனும்
முத்தர் போற்றும் இப்ர பஞ்சநிதி
சுப்ரமண்யனெனும் [முரு]

சரணம்

நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும்
நுண்ணறிவுந் தவப் புண்ணியஞ்சாரவும் சாரவும்
தூயவென் தாய்மனத் துக்கமகற்றவும்
துதுநீயே இனிவேறில்லை
தொண்டர் சுந்தரன் சந்ததம்
துதித்தேன் மகித்தேன்
பட்டணத்து செட்டி சுக்ல
முற்பவித்த வித்வபுத்திர
விதரணகுண நயவருணகிரியே [முரு]

புதிய பாடல்கள் அமைந்த
கிராமபோன் கீர்த்தனம்ருதம்
3ம் பாகம் விலை 0 2 0

மனோரஞ்சினி பிரஸ், மதராஸ்.

அதியற்புதக் கதா கற்பித பொக்கிஷம்!

மதனசிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான்

ஓர் இனிய துப்பறியும் நவீனம்

மருதூர் A. பிரபாகர சாஸ்திரி B. A. அவர்கள்

எழுதியது

இவ்வரிய நவீனத்தைப்பற்றிய நல்லபிப்பராயங்கள் பல அறிஞரிடத்திலிருந்தும் தினே தினே வந்துக்கொண்டிருப்பதே இதிலுள்ள விசேஷத்திற்கும் இனிமையான கதைப்போக்கிற்கும் எளிய நடைக்கும சாக்ஷியம் கூறும். ஆ! இதனைப் படித்தோரே இதன் அருமையை அறிவீர்!

ஆச்சரியம்! ஒரு சீமான் தமது உரிமையை இழக்க நேரிட்டதெப்படி? ஏன் இழந்தார்? பிறகு என்ன செய்தார்? இதை ஆச்சர்யமெனக் கருதவில்லையா? அனுபவம்! கதா நாயகனின் அனுபவங்களை அறிய நீங்கள் ஆசை கொள்ளவில்லையா? ஆனந்தம் கதையின் இன்பகரமான முடிவை அறிவது அவசியமென உங்களுக்குத் தோற்றவில்லையா? ஆகவே ஆச்சர்யமும் அனுபவமுமடைந்த பிறகு ஆனந்தமுமடைய இதனை வாங்கி வாசியுங்கள். இருபத்து ஐந்து அழகிய அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயமும் படிப்பவர் மனது கருங்கல்லை யொத்தாயிருப்பினும் அதை பாகு போல் கரையச்செய்யுமென்பது நிச்சயம்.

விலை ரூ. 1—0—0

விலாசம் —

ஸ்ரீ வாணி விலாச புஸ்தகசாலை,
79, சுப்புராய செட்டி வீதி,
திருப்பாதிரிப்புலியூர்.

இப்புத்தகம் ஆர்டர் செய்பவருக்கு தமாஷ் தடியன் நாவல் இனும்

காதற் கடிதங்கள் நிறைந்த புதிய நாவல்!

நாவலிற் சிறந்த நவீன நாவல்!!

புத்தியை புகட்டும் புதுமையான நாவல்!!!

வை. மு. கோதை நாயகி அம்மாள் எழுதிய

கோபாலரத்னம்

இதில் வேலையில்லாத திண்டாட்டத்தினுல் படும் சங்கடங்களும், வரதட்சிணை என்னும் பைசாசத்தினுல் பிரிக்கப்பட்ட தம்பதிகளின் காதற் கடிதங்களும், உத்தம சகோதரர்களின் உயரிய வாஞ்சையும், உலகானுபவமே உருவாகக்கொண்ட அதியற்புதமான இதா விஷயங்களும் இதில் நிறைந்து கிடைக்க காணலாம். ஆண் பெண்களனைவரும் ஆவலோடு படித்துப் பயன் கொள்ளதக்கது

விலை அணு 0—14—0

ஷியார் எழுதிய புதியநாவல் ருக்மிணீகாந்தன் என்னும் நாவலை வாங்கி வாசித்து இன்புறவும் அழகிய ஆப்டோன் படத்துடன் கூடியது விலை ரூ. 1—12—0

விலாசம்:—

ஸ்ரீ வாணிவிலாச புஸ்தகசாலை,

79-சுப்பராயசெட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.